# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.528/2016/பே**

**ஆணை எண்.42 /2018, நாள். 02–03–2018**

**அண்ணா காமராஜ் பேருந்து நிலைய கடைக்காரர்கள் நலச்சங்கம்,**
**SL.No. 66/2009.**
**பாலக்கோடு**
**தருமபுரி மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்கள்.**

**முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,**
**பாலக்கோடு பேரூராட்சி,**
**தருமபுரி மாவட்டம். — எதிர் மனுதாரர்கள்.**

**ஆணை.**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சியை சேர்ந்த அண்ணா காமராஜ் பேருந்து நிலைய கடைக்காரர்கள் நலச்சங்கத்தின் 23.03.2015 நாளிட்ட புகார் மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 4534/2015/இ.2/நாள் 02.05.2016ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2016ல் பெறப்பட்டது. முறையீட்டு மனு 528/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், அறிக்கைகள் பெறப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர்கள் தங்களது முறையீட்டு மனுவில், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சியில் சுமார் 15 ஆண்டுகளாக கடை ஏலம் எடுத்து நடத்துவதாகவும், தங்கள் கடைகளின் அருகில் 1 அடி அல்லது 2 அடி இடம் இருந்தாலும் அந்த இடம் தங்களுக்கு சொந்தம் என மிரட்டி அந்த இடத்தினை வேறு ஆட்களுக்கு வாடகைக்கு விட அடாவடித்தனம் செய்து மேற்படி பேரூராட்சி கவுன்சிலர்கள் பணம் பறிக்க முயற்சி செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடங்களை பார்வையிட்டு மேற்கண்ட கவுன்சிலர்கள் அபகரிக்க முயற்சிக்கும் இடங்களை ஒரு கடை வைத்து நடத்துவதற்கு

வசதியாக இருந்தால் சட்டப்படி டெண்டர் விட்டு நியாயமான முறையில் ஏலம் விட்டு நடத்துமாறும் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 13.06.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015ல் விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு கட்டணம் ரூ 10/-க்கான நீதிமன்ற கட்டண வில்லையுடன் முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் (படிவம்.1) ல் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர்களால் முறையீட்டு மனு உரிய முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இம்முறைமன்ற நடுவ 13.01.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தங்கள் தரப்பு விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்திட இம்முறைமன்ற நடுவத்தில் 02.03.2017 அன்று ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது. மேற்படி விசாரணைக்கு மனுதாரர் தரப்பில் எவரும் ஆஜராகவில்ல.

இம்முறைமன்ற நடுவ 13.01.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலர் கடித ந.க.எண். 76/2017/அ.1/நாள் 21.03.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் மற்றும் நகர பேருந்து நிலையத்தில் பேரூராட்சிக்கு சொந்தமான 75 கடைகள் உள்ளதாகவும், இவைகள் அனைத்தும் பேரூராட்சியின் மூலம், அரசாணையின்படி ஏலம் விட்டும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டும் வருவதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பேரூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் பெயரில் எந்த ஒரு கடையும் எடுக்கப்படவில்லை எனவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பேருந்து நிலையத்தில் 2014-15ம் ஆண்டில் 10 காலியிட கடைகளை வைத்துக் கொள்ள அப்போதைய பேரூராட்சி மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டு, பாலக்கோடு பேரூராட்சி ந.க. எண். 560/2014/அ.1/நாள் 11.08.2014ன் உத்திரவின்படி வழுங்கப்பட்டதை தொடர்ந்து திரு கே.ராஜா, துணைத்தலைவர், அண்ணா காமராஜர் பேருந்து நிலைய கடைக்காரர்கள் நலச்சங்கம் சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No. 10907/2015 ன் மூலம் வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில் 16.04.2015ம் தேதிய தீர்ப்பாணையில் மேற்படி காலியிட கடைகள் குத்தகை முறைப்படி ஏலம் விடப்பட்டு அதனை சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு ஆய்வு செய்து மறு உத்திரவு பிறப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு அதற்கான நீதிமன்ற ஆணையின் நகலும் இணைத்து சமர்ப்பிப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காலியிடத்தில் கடைகள் ஏதும் வைக்கப்படாமல் இருந்ததால் ந.க.எண். 560/2014 நாள் 11.08.2014 ம் தேதிய உத்திரவினை ரத்து செய்தும் உத்திரவிடப்பட்டது எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சியின் செயல் அலுவலர், பாலக்கோடு தெரிவித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக மேற்படி இடத்தில் கடைகள் ஏதும் வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக அண்ணா காமராஜர் கடைக்காரர்கள் நலச்சங்கம் சார்பில் 13.01.2017ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் மனு ஏதும் அளிக்கவில்லை என கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாகவும் இதனால் இம்மனு மீதான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை என தனது கடிதத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பேருந்து நிலையத்தில் அண்ணா காமராஜர் கடைக்காரர்கள் நலச்சங்கம் சார்பில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு அளித்துள்ள புகார் மனு ஏற்கனவே 23.03.2015ல் மாண்புமிகு தமிழகமுதலமைச்சரின் தனிப்பிரிவு, மாவட்ட ஆட்சியர், இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் ஆகியோர்களுக்கு அனுப்பிய மனுவின் ஒளி நகலை எடுத்து இரண்டு ஆண்டுகள் கழித்து உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.08.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தங்களது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யக் கோரி முறையீட்டு மனுதாரர் மற்றும் பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை இம்முறைமன்ற நடுவத்தில் 28.09.2017 அன்று ஆஜராக ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாலக்கோடு பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 27.09.2017 நாளிட்ட கடிதம் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) மூலம் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் வேறொரு தேதியில் விசாரணையினை நிர்ணயிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் மேற்படி கடிதத்தில் தருமபுரி மாவட்டம் , பாலக்கோடு பேரூராட்சி பேருந்து நிலையத்தில் கடை வைத்திருக்கும் அண்ணா காமராஜர் கடைக்காரர்கள் நலச்சங்கம் சார்பில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு திரு து. ராஜா, த/பெ திரு துரைசாமி என்பவரால் அளித்துள்ள மேல்முறையீடு தன்னால் அளிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளதாகவும், இதன்பொருட்டு நோட்டரி வழக்கறிஞர் மூலம் ரூ 20/-க்கான முத்திரைத்தாளில் தனது வழக்கினை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் உறுதி மொழி பத்திரம் மூலம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டு பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி உறுதி மொழி பத்திரத்தையும் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திரு கே. ராஜா, முன்னாள் துணைத் தலைவர், அண்ணா காமராஜர் பேருந்து நிலைய கடைக்காரர்கள் நலச்சங்கம், பாலக்கோடு தனது 27.09.2017ம் நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ மனு எண் 528/பே.2/நாள் 08.08.2017 குறித்து தனது விளக்கத்தினை தெரிவித்துள்ளார். தருமபுரி மாவட்ட பாலக்கோடு நலச்சங்கம் சார்பில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு திரு து. ராஜா, த/பெ திரு துரைசாமி, ஆகிய தனது பெயரில் புகார் மனு மேல்முறையீடு அனுப்பியுள்ளது தொடர்பாக 23.03.2017 அன்று நோட்டரி வழக்கறிஞர் மூலம் வழக்கினை திரும்பப் பெற்றுக் கொள்வதாக சம்மதம் தெரிவித்து ரூ.20/--க்கான முத்திரைத்தாளில் உறுதிமொழி ஆவணம் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட புகார் மனு தவறுதலாக தனது முகவரியிட்டு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேற்படி மனுவிற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என தெரிவித்து தன்னால் 28.09.2017ல் சென்னைக்கு விசாரணைக்கு வர இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்து தனது பெயரில் தவறுதலாக அளித்துள்ள இம்மேல்முறையீட்டு மனு சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் தேவையில்லை என தெரிவித்து இம்மனு விசாரணையினை தள்ளுபடி செய்யக் கோருவதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் அவ்வாறான புகார் மனு ஏதும் அனுப்பவில்லை என்பது உண்மையெனில் திரும்ப பெற்றுக் கொள்வதாக உறுதிமொழி ஆவணம் அளிக்கவேண்டிய அவசியம் என்ன என இம்முறைமன்ற நடுவம் கருதி தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

எனவே இம்முறைமன்ற நடுவ 11.10.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் பாலக்கோடு பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2017ல் ஆஜராகி தனது விளக்கத்தினை பதிவு செய்யக் கோரி ஆணையிடப்பட்டது.

பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2017 அன்று நேரில் ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"…….அண்ணா காமராஜ் பேருந்து நிலைய கடைக்காரர்களுடைய நலச் சங்கத்தின் சார்பாக அதனுடைய துணைத்தலைவர் திரு ராஜா என்பவர் அனுப்பிய புகார் மனு விவரம் பற்றி தனக்கு தெரியும் என தனது வாக்குமூலத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். அது குறித்து தன்னால் 21.03.2017ல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி அறிக்கையில் முன்னாள் உறுப்பினர் பெயரில் எந்த கடையும் இல்லை எனவும், மேலும் திரு ராஜா, இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். திரு ராஜா என்பவர் 23.03.2015ல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்துள்ள மனு மீது விசாரணை மேற்கொண்டு குறைகள் சரி செய்யப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தான் செப்டம்பர் 2016 முதல் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், தனக்கு முன்பு திரு தனபால் என்பவர் 10.02.2016 முதல்

30.08.2016 வரையிலும் அதற்கு முன்னர் திருமதி ஆயிஷா என்பவர் கூடுதல் பொறுப்பில் ஒரு பத்து மாத காலம் பணிபுரிந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரரான திரு ராஜா என்பவர் 1வது எண் உள்ள கடையினை வைத்துள்ளார் எனவும், அவர் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் கடை வைத்துள்ளதாகவும் தெரிவித்தள்ளார். அவருக்கு எப்போது கடை வழங்கப்பட்டது, எத்தனை முறை வழங்கப்பட்டது, மனுவில் குறிப்பிட்டுள்ள கடைகள் பேரூராட்சியால் எந்த ஆண்டு கட்டி கொடுக்கப்பட்டது, பேரூராட்சி காலியிடங்களில் கடைகள் ஏதும் வைக்கப்படவில்லையா, மனுவில் குறிப்பிட்டுள்ள காலி இடங்களில் கடை இருந்ததாக சொல்லப்பட்ட இடங்களில் எத்தனை கடைகள் எந்த தேதி முதல் இயங்குகிறது, மேற்படி கடைகள் எப்போது காலி செய்யப்பட்டது, பாலக்கோடு பேரூராட்சியில் எத்தனை இடங்களில் பேரூராட்சியால் எத்தனை கடைகள் கட்டப்பட்டன, எந்த ஆண்டுகளில் கட்டப்பட்டன, எந்த ஆண்டு முதல் இந்தக் கடைகளுக்கு வாடகை நிமித்தமாக டெண்டர் வைக்கப்பட்டது போன்ற விவரங்களையும், எத்தனை கடைகளுக்கு குத்தகை காலக்கெடு நீட்டிக்கப்பட்டது. இறுதியாக எந்த தேதியில் இக்கடைகளுக்கான வாடகை சம்பந்தமாக டெண்டர் கோரப்பட்டது, புகார் மனுதாரராக சொல்லப்படும் திரு ராஜா எந்த கடையை பெற்று இருக்கிறார்? எப்போது முதல் பெற்றுள்ளார் அவர் மேற்படி கடைக்கு செலுத்தி வரும் வாடகை குறித்த விவரங்களை ஒரு வார காலத்திற்குள் அனுப்பிவைப்பதாக தனது வாக்குமூலத்தில் பேரூராட்சியின் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சியின் ஆவணங்களைப் பரிசீலித்ததில் 2014 ல் பேருந்து நிலைய வளாகத்தினுள் இருந்த காலி இடங்களில் கடைகள் வைத்து நடத்திக் கொள்ள பேரூராட்சியால் விதிகளுக்கு முரணாக தொகை ஏதும் குறிப்பிடப்படாமல் தனி நபர்களுக்கு ஏல விதிமுறைகளின்றி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மனுதாரர் திரு ராஜா, துணைத்தலைவர், அண்ணா காமராஜர் பேருந்து நிலைய கடைக்காரர்கள் நலச்சங்கம் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் (W.P.No.10907/2015) தொடரப்பட்டு மனுதாரரால் அளிக்கப்பட்ட 23.03.2015 நாளிட்ட மனு மீது சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து விரைவாக நான்கு வாரங்களுக்குள் தக்க ஆணை பிறப்பிக்க 16.04.2015ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலரால் பேருந்து நிலைய காலி இட கடையின் அனுமதியை இரத்து செய்து 28.01.2016 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாண்பமை நீதிமன்றத்தால் மேற்படி நடவடிக்கை பதிவு செய்யப்பட்டு மனுதாரரால் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (எண் 1767/2015) முடிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் 23.03.2015 மனு அளித்துள்ளது உறுதி ஆவதுடன் அது குறித்து நீதிமன்ற ஆவணங்களுக்குப் பின்னர் செயல் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதும் நன்கு புலனாகிறது. இந்நிலையில் மனுதாரரிடம் அவ்வாறான மனு அளிக்கப்படவில்லை என உறுதிமொழிப் பத்திரம் ஒன்றினை பெற்று அனுப்பியுள்ளது அவசியமற்றது உள்நோக்கம் கொண்டது என இம்முறைமன்ற நடுவம் கண்டனத்தை பதிவு செய்கிறது.

இருப்பினும் பேரூராட்சி பிற கடைகள் ஏலம் தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கைகள் / ஆவணங்கள் பெறப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் முழுமையாக பரிசீலிக்கப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 21.11.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு மேற்படி பேரூராட்சியின் மூலம் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ள கடைகள் குறித்தான விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி ஆணையிடப்பட்டது,.

பாலக்கோடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 76/2017/அ.1/நாள் 06.12.2017ன் மூலம் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு அணை வெளியிடப்படுகிறது.

இம்முறைமன்ற நடுவ 11.01.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் 23.03.2015ம் நாளிட்ட அண்ணா காமராஜர் பேருந்து நிலையக் கடைககாரர்கள் நலச் சங்கம் மூலம் பெறப்பட்ட மனு மட்டுமே இணைத்து அனுப்பிவைக்கப்பட்டு அம்மனுவிற்கான விளக்கம் கோரப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலர் இதனை கவனிக்காமல் 11.01.2017 அறிவிப்பாணையினையே தவறாக, மனு நாள் 11.01.2017 என குறிப்பிட்டு தனது பதிலை 22.03.2017 அனுப்பியுள்ளது கண்டனத்துக்குரியது.

பாலக்கோடு பேரூராட்சியில், பேரூராட்சி மூலம் 7 இடங்களில் பல்வேறு திட்ட நிதி மூலம் கடைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அதற்கான ஏலம் நடத்தப்பட்ட ஆண்டு மற்றும் ஏலத் தொகை போன்ற விவரங்களை தனது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அரசாணை எண் 92/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி-4) துறை நாள் 03.07.2007ன்படி ஒரு கடைக்கான குத்தகை காலத்தினை 9 ஆண்டுகள் வரை மட்டுமே புதுப்பிக்கலாம் எனவும், மேலும் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையிலும் ஏலம் புதுப்பிக்கப்பட்டு ஏற்கனவே விடப்பட்ட ஏலத் தொகையினைவிட கூடுதலாக 15% தொகையினை குத்தகை தொகையாக உயர்த்தப்படவேண்டும் என்ற விதிமுறையினை பெரும்பாலான கடைகள் ஏலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது புலனாகிறது. மேலும் ஒரு சில கடைகளில் ஏற்கனவே விடப்பட்ட தொகையினை விட குறைவான தொகையிலும் ஏலம் விடப்பட்டுள்ளது பேரூராட்சியின் செயல் அலுவலரின் அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது. கீழ்கண்ட இடங்களில் பேரூராட்சி மூலம் பல்வேறு நிதியில் கட்டப்பட்ட கடைகளுக்கான வாடகை விடுவதில் குறைவான தொகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளதோடல்லாமல் அரசாணையின்படி 15% உயர்த்தப்படாமல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதிலிருந்து மேற்படி நடைமுறைகள் மீறப்பட்டுள்ளது தெரியவந்துள்ளன.

சார்பதிவாளர் அலுவலகம் முன்புறமுள்ள கடைகள்

| வ.எண் | கடை எண் | ஏலம் விடப்பட்ட ஆண்டு | ஏலத் தொகை | அரசாணைப்படி ஏலம் விடப்படவேண்டி தொகை | இழப்பீட்டுத் தொகை | பெருமொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 6 | 2006–07 | 5500–00 | | | |
| | | 2009–10 | 4140–00 | 6325–00 | 2185–00 | |
| | | 2012–13 | 4761–00 | 7274–00 | 2513–00 | |
| | | | | | | |
| | | 2015–16 | 6000–00 | 8325–00 | 5625–00 | |
| | | மொத்தம் | | | 7023–00 | 7023–00 |
| | 7 | 2006–07 | 7000–00 | | | |
| | | 2009–10 | 2300–00 | 8050–00 | 5750–00 | |
| | | 2012–13 | 2645–00 | 10465–00 | 7820–00 | |
| | | 2015–16 | 3350–00 | 12035–00 | 11700–00 | |
| | | மொத்தம் | | | 25270–00 | 32293–00 |

டவுன் பஸ் நிலையக் கடைகள்.

| வ.எண் | கடை எண் | ஏலம் விடப்பட்ட ஆண்டு | ஏலத் தொகை | அரசாணைப்படி ஏலம் விடப்படவேண்டி தொகை | இழப்பீட்டுத் தொகை | பெருமொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 6 | 2006–09 | 7100–00 | | | |
| | | 2009–12 | 7245–00 | 8165–00 | 920–00 | |
| | | 2012–15 | 8332–00 | 9390–00 | 1058–00 | |
| | | 2015–18 | 10450–00 | 10799–00 | 349–00 | |
| | | மொத்தம் | | | 2327–00 | 2327–00 |
| 2 | 7 | 2006–09 | 7500–00 | | | |
| | | 2009–12 | 7015–00 | 8625–00 | 1610–00 | |
| | | 2012–15 | 8067–00 | 9919–00 | 1852–00 | |
| | | 2015–18 | 10100–00 | 11407–00 | 1307–00 | |
| | | மொத்தம் | | | 4769–00 | 4769–00 |
| 3 | 8 | 2006–09 | 6850–00 | | | |
| | | 2009–12 | 5980–00 | 7878–00 | 1898–00 | |
| | | 2012–15 | 6877–00 | 8010–00 | 1133–00 | |
| | | 2015–18 | 8600–00 | 9212–00 | 612–00 | |
| | | மொத்தம் | | | 3643–00 | 3643–00 |

| வ.எண் | கடை எண் | ஏலம் விடப்பட்ட ஆண்டு | ஏலத் தொகை | அரசாணைப்படி ஏலம் விடப்படவேண்டி தொகை | இழப்பீட்டுத் தொகை | பெருமொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 2006-09 | 7550-00 | | | |
| | | 2009-12 | 6900-00 | 8683-00 | 1783-00 | |
| | | 2012-15 | 7935-00 | 9985-00 | 2050-00 | |
| | | 2015-18 | 9950-00 | 11483-00 | 1533-00 | |
| | | மொத்தம் | | | 11486-00 | 11483-00 |
| 5 | 10 | 2006-09 | 5000-00 | | | |
| | | 2009-12 | 1265-00 | 5750-00 | 4485-00 | |
| | | 2012-15 | 1455-00 | 6613-00 | 5158-00 | |
| | | 2015-18 | 1850-00 | 7605-00 | 5755-00 | |
| | | மொத்தம் | | | 15398-00 | 15398-00 |
| 6 | 11 | 2006-09 | 4300-00 | | | |
| | | 2009-12 | 2300-00 | 4945-00 | 2645-00 | |
| | | 2012-15 | 2645-00 | 5687-00 | 3042-00 | |
| | | 2015-18 | 3350-00 | 6540-00 | 3190-00 | |
| | | மொத்தம் | | | 8877-00 | 8877-00 |
| 7 | 12 | 2006-09 | 5350-00 | | | |
| | | 2009-12 | 3450-00 | 6153-00 | 2703-00 | |
| | | 2012-15 | 3968-00 | 7076-00 | 3108-00 | |
| | | 2015-18 | 5000-00 | 8137-00 | 3137-00 | |
| | | மொத்தம் | | | 8948-00 | 8948-00 |
| 8 | 13 | 2006-09 | 5300-00 | | | |
| | | 2009-12 | 3450-00 | 6095-00 | 2645-00 | |
| | | 2012-15 | 3968-00 | 7009-00 | 3041-00 | |
| | | 2015-18 | 5000-00 | 8060-00 | 3060-00 | |
| | | மொத்தம் | | | 8476-00 | 8746-00 |
| 9 | 14 | 2006-09 | 4200-00 | | | |
| | | 2009-12 | 2300-00 | 4830-00 | 2530-00 | |
| | | 2012-15 | 2645-00 | 5555-00 | 2910-00 | |
| | | 2015-18 | 3350-00 | 6388-00 | 3038-00 | |
| | | மொத்தம் | | | 8478-00 | 8478-00 |
| 10 | 15 | 2006-09 | 4000-00 | | | |
| | | 2009-12 | 1955-00 | 4600-00 | 2645-00 | |
| | | 2012-15 | 2248-00 | 5290-00 | 3042-00 | |
| | | 2015-18 | 2850-00 | 6084-00 | 3234-00 | |
| | | மொத்தம் | | | 8921-00 | 8921-00 |

| வ.எண் | கடை எண் | ஏலம் விடப்பட்ட ஆண்டு | ஏலத் தொகை | அரசாணைப்படி ஏலம் விடப்படவேண்டி தொகை | இழப்பீட்டுத் தொகை | பெருமொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 11 | 16 | 2006–09 | 4100–00 | | | |
| | | 2009–12 | 1955–00 | 4715–00 | 2760–00 | |
| | | 2012–15 | 2248–00 | 5422–00 | 3174–00 | |
| | | 2015–18 | 2850–00 | 6235–00 | 3385–00 | |
| | | மொத்தம் | | | 9319–00 | 9319–00 |
| 12 | 17 | 2006–09 | 4050–00 | | | |
| | | 2009–12 | 1955–00 | 4658–00 | 2703–00 | |
| | | 2012–15 | 2248–00 | 5357–00 | 3109–00 | |
| | | 2015–18 | 2850–00 | 6160–00 | 3310–00 | |
| | | மொத்தம் | | | 9122–00 | 9122–00 |
| 13 | 18 | 2006–09 | 4900–00 | | | |
| | | 2009–12 | 1955–00 | 5635–00 | 3680–00 | |
| | | 2012–15 | 2248–00 | 6480–00 | 4232–00 | |
| | | 2015–18 | 2849–00 | 7452–00 | 4603–00 | |
| | | மொத்தம் | | | 12515–00 | 12515–00 |
| | | பெரு மொத்தம் | | | | 106429–00 |

டவுன் பஸ் நிலையக் கடைகளை பொறுத்தமட்டில் மொத்தமுள்ள 18 கடைகளில் 1 முதல் 5 எணிக்கையிலான கடைகளுக்கு மட்டுமே அரசாணையின்படி விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளது. கடை எண் 6 முதல் 18 முடியவுள்ள கடைகளுக்கான ஏலம் விடுதலில் அரசாணையில் விதித்துள்ள நடைமுறைகளை கடைபிடிக்காமல் ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் பேரூராட்சிக்கு மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ 1,06,429/– ஏற்பட்டுள்ளது.

ஜ.வி.வி.டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 6 கடைகளும் ஒவ்வொரு ஆண்டும் ஏலம் விடப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கடை எண் 1, 2 மற்றும் 3ம் எண்ணுக்குரிய கடைகளுக்கு ஏற்கனவே ஏலம் விடப்பட்டுள்ள தொகையினை விட அடுத்த ஆண்டில் குறைவான தொகைக்கே ஏலம் விடப்பட்டுள்ளது. விதிமுறைகளின்படி உரிய தொகையினை கணக்கிட்டு இழப்பீட்டிற்கு பொறுப்பானவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

பொது நிதியின் மூலம் கட்டப்பட்டுள்ள 4 கடைகளில் 2011–12ம் ஆண்டு முதல் 2016–17ம் ஆண்டு வரை ஏலத் தொகையினை மாற்றாமலும், அரசாணையின் விதிமுறைகளை கடைபிடிக்காமலும் ஒரே அளவாக வசூலிக்கப்பட்டுள்ளது பேரூராட்சியின் செயல் அலுவலரின் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது. இக்குறைபாடும் நிவர்த்தி செய்யப்பட்டு 2011–12 முதல்

2016–17 முடிய உள்ள காலங்களுக்கு அரசு விதிமுறைகளின்படி ஏலம் விடப்படும்பட்சத்தில் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையினை கண்டறிந்து உரிய நபர்களிடம் வசூலிக்கப்படவேண்டும்.

எனவே மேற்கண்ட விவரங்களின்படி சார்பதிவாளர் அலுவலகம் அருகில் உள்ள கடைகள் மற்றும் டவுன் பஸ் நிலையக் கடைகளை அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15% சதவீதம் உயர்த்தி ஏலம் விடப்படாததால் **பொத்தமாக பேரூராட்சிக்கு ரூ. 1,38,722/– இழப்பீடு ஏற்பட்டுள்ளது.** மேலும் அரசாணைக்கு முரணாக ஒரே கடையினை 10 முதல் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே நபருக்கு ஒரே அளவிலான வாடகைக்கு விடப்பட்டுள்ளது. எனவே அரசாணையில் தெரிவித்துள்ள விதிகளுக்கு முரணாக ஏலம் விட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், **மேற்கண்டவாறு கண்டறியப்பட்ட/கண்டறியப்படும் இழப்பீட்டுத் தொகையினை உரிய நபர்களிடமிருந்து வசூலிக்கவும்** நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்குத் தெரிவித்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

செயலாளர் 6/3/18

பெறுநர்

1.திரு து. ராஜா,
துணைத் தலைவர்
அண்ணா காமராஜ் பேருந்து நிலைய கடைக்காரர்கள் நலச்சங்கம்,
SL.No. 66/2009
பாலக்கோடு–636 808
தருமபுரி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
பாலக்கோடு தேர்வு நிலை பேரூராட்சி,
தருமபுரி மாவட்டம்.–636 808.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தருமபுரி.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை–108.